**செய்தி வெளியீடு எண்:1081** **நாள்:11.11.2021**

## செய்தி வெளியீடு

ஹஜ் 2022-ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மும்பை, இந்திய ஹஜ் குழு சார்பாக தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, ஹஜ் விண்ணப்பங்களை (HAFs) வரவேற்கிறது. சிறப்பு விதிமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள், தகுதிக்கான அளவுகோல்கள், வயது கட்டுப்பாடுகள், உடல்நலம் மற்றும் உடற்தகுதி தேவைகள் மற்றும் கொரோனா தொற்றுக்கு மத்தியில் சவூதி அரேபிய அரசால் கட்டாயமாக்கப்பட்ட மற்றும் பிற தொடர்புடைய நிபந்தனைகளுடன் சிறப்பு சூழ்நிலைகளின் கீழ் ஹஜ் 2022 நடைபெறும். ஹஜ் 2022-ற்கான ஹஜ் விண்ணப்பத்தின் முழு செயல்முறையும் சவூதி அரேபிய அரசின் இறுதி வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டது. இந்திய ஹஜ் குழு மூலம் ஹஜ் 2022-ற்காக விண்ணப்பிக்கும் செயல்முறை 01.11.2021 முதல் ஆன்லைனில் தொடங்கி 31.01.2022 அன்று முடிவடைகிறது. விண்ணப்பதாரர்கள் 2022-க்கு புறப்படுவதற்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்பு அங்கீகரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் செலுத்தியிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்தை இந்திய ஹஜ் குழு இணையதளம் அதாவது www.hajcommittee.gov.in வழியாகவோ, அல்லது மும்பை இந்திய ஹஜ் குழுவின் "HCOI" என்கிற செயலியினை கைபேசியில் பதிவிறக்கம் செய்வதன் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்தோ விண்ணப்பிக்கலாம். இயந்திரம் மூலம் படிக்கத் தக்க பாஸ்போர்ட்டின் முதல் மற்றும் கடைசி பக்கம், சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், உறைத் தலைவரின் இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் மற்றும் முகவரிச் சான்றின் நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஹஜ் விண்ணப்பம் ஆன்லைனில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஹஜ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் விண்ணப்பதாரர் வழிகாட்டுதல்/ உறுதிமொழியினை கவனமாக கடைபிடிக்க வேண்டும். பதிவுக் கட்டணம் (நபரொருவருக்கு ரூ.300/- வீதம்) ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாங்களே பூர்த்தி செய்யலாம் அல்லது இணையதளக்கூடம் (Cybercafes), தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் தங்கள் வசதிக்கேற்ப விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யலாம். ஹஜ் 2020 மற்றும் ஹஜ் 2021-க்கு விண்ணப்பித்துள்ள ஆண் வழித்துணை இல்லாத பெண் பயணிகள் ரூ.300/- செயலாக்கக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும். எனினும், அவர்கள் ஹஜ் 2022-க்கு புதியதாக விண்ணப்பிக்க வேண்டும்.

ஹஜ் 2022–ன் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள்/அம்சங்கள் பின்வருமாறு :–

- வயது வரம்பு 65 வயது வரை.
- ஒரு உறையில் (Cover) அதிகபட்சம் ஐந்து (5) நபர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஹஜ் பயணம் 36–42 நாட்கள்.
- 45–65 வயதுடைய ஆண் வழித்துணை இல்லாத பெண் பயணிகள் மற்றும் 4–5 பயணிகள் குழுவாக செல்ல வேண்டும்.
- தற்போது நிலவும் கொரோனா தொற்று நோயைக் கருத்திற்கொண்டு, ஹஜ் 2022–ற்கான புறப்பாட்டு தளம் 10 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, அகமதாபாத், பெங்களூரு, கொச்சின், டெல்லி, கௌஹாத்தி, ஹைதராபாத், கொல்கத்தா, லக்னோ, மும்பை மற்றும் ஸ்ரீநகர். தமிழ்நாட்டின் ஹஜ் புனிதப் பயணிகளைப் பொறுத்த வரையில் கொச்சின் புறப்பாட்டுத் தளமாக இருக்கும். இருப்பினும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு, ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகள், சென்னையிலிருந்து வழக்கம் போல் புறப்படும் வகையில் அனுமதி வழங்கக் கோரி கடிதம் எழுதியுள்ளார்கள்.
- கொரோனா நோய் தொற்று காரணமாக அயல்நாட்டில் பணிபுரியும் இந்தியர்களுக்கு (NRI's) ஹஜ் மேற்கொள்ள எந்த ஏற்பாடும் செய்யப்பட மாட்டாது.
- தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்ட புனிதப் பயணிகள் மட்டும் ரூ.81,000/–ஐ ஹஜ் முன் பணத் தொகையாக செலுத்த வேண்டும்.
- இயந்திரம் மூலம் படிக்கத் தக்க சர்வதேச பாஸ்போர்ட் 31.12.2022 வரையில் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

ஹஜ் 2022 பற்றிய விவரங்களுக்கு, புனிதப் பயணிகள் ஹஜ் 2022–ற்கான வழிகாட்டுதல்களைப் படிக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு விண்ணப்பதாரர்கள் இந்திய ஹஜ் குழுவின் ஹஜ் தகவல் மையத்தை தொடர்பு கொள்ளலாம் : 022–22107070 (100 தொடர்பு எண்கள்).

**அரசு முதன்மைச் செயலாளர்,**
**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்**
**மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**